என்பது ஓராண்டிலே இயலாத காரியம். ஏனென்றால் இது பல்வேறு காலகட்டங்களிலே செய்யப்படவேண்டிய ஒரு விஷயம். ஆகவேதான் நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பின்னாலே தான் இப்படிப்பட்ட பணிகளை துவக்கியிருக்கிறோம். காலங் காலமாக இருந்த பிரச்சினைகளையெல்லாம் நாம் எதிர் நோக்க வேண்டிய காரணத்தினாலே பல வேலைகளை உடனடியாகச் செய்தாலும் கூட கொஞ்சம் காலக்கெடு தேவைப்படுகிறது. ஆகவேதான் சென்ற ஆண்டு பாதி வேலையை முடித்து இருக்கிறோம். இந்த ஆண்டு இதற்கான பணிகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே அவர் தெரிவித்து இருக்கின்ற பகுதிகளில் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு பணிகளைச் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பிரச்சினையை அரசு ஏற்கனவே உணர்ந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கி கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 448, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்—

448—

சிவகாசிக்கருகே பாலம் கட்டுதல்.

*11520—திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவகாசி வெம்பக்கோட்டை சாலையில் சிவகாசிக் கருகே செம்புக்குட்டி தெப்பம் சமீபம் பாலம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இருந்த போதிலும் அந்தப் பாலம் ஒரு காலத்தில் சிவகாசிக்கு வெளிப்புறமாக இருந்தாலும், சிவகாசி நகரம் வளர்ந்து வருகின்ற காரணத்தால் அங்கே

1993 ஏப்ரல் 23]

கண்டிப்பான சூழ்நிலையில் பெண்கள் அனைவரும் அந்தப் பகுதியின் வழியாகத்தான் தன்னுடைய வீடுகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. மழைக் காலத்தில் ஏற்படும் சேறும் சகதியின் காரணமாக முழங்கால் வரை அங்கே அதை கடக்கும் போது பெண்கள் தங்களுடைய சேலையை எடுத்துச் செல்லும் நிலைமை இருக்கிறது. அது ஆபாசமாகவும் இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறைந்தபட்சம் கல்வெர்ட்டாவது அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் அப்படிப்பட்ட பிரச்சினை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார். பெண்கள், ஏதோ பிரச்சினைகள் எல்லாம் என்னிடத்தில் நேரில் தெரிவித்து இருக்கலாம். அந்த இடத்தில் பாலம் கட்டவேண்டும் என்பது நியாயம். ஒரு இடத்தில் தண்ணீர் தேங்கி நிற்கிறது என்றால் அது பாலத்தில் மட்டுமல்ல, குளங்களைக் கடந்து செல்லும் போதும், அல்லது தெருக்களிலே வெள்ளம் வரும்போதும்கூட, மழைக்காலங்களில் நடந்து செல்லும்போது கூட அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பாலத்தில் நடந்து செல்கிறபோதுதான் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகிறது என்ற கருத்தை மாண்பமிகு உறுப்பினர் அவர்கள் தவிர்க்க வேண்டும். இதுபோன்ற தவறான தகவல்களை இந்த அவையில் தரக்கூடாது என்பதைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அவர் பாலம் கட்டவேண்டுமென்று கேட்கிறார். இப்போது அந்தப் பாலம் கட்டுகின்ற திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பாலமே இல்லை, அடுத்த ஆண்டாவது சிறிய அளவில் கல்வெர்ட்டாவது அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் இல்லாததால பரிசீலனை செய்வதற்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 449, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை.

சட்டமன்ற நூலகம் TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வினா எண் 450, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. சிங்கை கோவிந்தராசு கேட்கிறார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

450—

ஆவின் நெய் டின்களில் இந்தி மொழியில் எழுதப்பட்டிருத்தல்.

*20374— திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு உணவுமற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் நெய் டின்களில் இந்தி புகுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது எவ்வாறு அரசின் மொழிக் கொள்கைக்கு உகந்தது ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தில் உற்பத்தி செய்யப்படும் நெய்யின் அளவில் 90 விழுக்காடு வட மாநிலங்களில் விற்பனையாவதால் அம்மாநிலங்களில் உள்ள இந்தி மட்டுமே அறிந்துள்ள நுகர்வோர் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஆவின் நெய் என்ற வார்த்தைகள் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் அந்த டின்னின் மேல் அச்சிடப்பட்டுள்ளன.

(ஆ) இது அரசின் மொழிக் கொள்கைக்கு எந்த வகைக் யிலும் முரணானது அல்ல.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நெய் கூட்டுறவுத் துறை இணையத்தின் மூலமாக வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதாகவும், அரசின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும் இந்த முறை கையாளப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இந்தி எழுத்துக்கள் எந்த ஆண்டிலிருந்து அந்த டின்களில் பதிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும் அதனால் ஆவின் நெய் டின்கள் அதிக அளவில் வெளி மாநிலங்களில் விற்பனை ஆகின்றதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.